**கிராமின் கிருஷி மவுசம் சேவா**

இந்திய வானிலை துறை

தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம்

கோவை, தமிழ்நாடு

# அக்ரோமெட் ஆலோசனை புல்லட்டின்

**தேதி : 26-12-2023**

**கடலூர்(தமிழ்நாடு) வானிலை முன்னறிவிப்பு - அன்று வெளியிடப்பட்ட :2023-12-26 ( அடுத்த 5 நாட்களில் 8:30 IST வரை செல்லுபடியாகும்)**

| வானிலை காரணி | 2023-12-27 | 2023-12-28 | 2023-12-29 | 2023-12-30 | 2023-12-31 |
|---|---|---|---|---|---|
| மழையளவு (மி.மீ ) | 0.0 | 1.0 | 2.0 | 2.0 | 0.0 |
| அதிக பட்ச வெப்பநிலை ( oசெ ) | 28.0 | 28.0 | 28.0 | 27.0 | 28.0 |
| குறைந்த பட்ச வெப்பநிலை (o செ ) | 23.0 | 23.0 | 22.0 | 22.0 | 22.0 |
| அதிக பட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 90 | 80 | 90 | 90 | 90 |
| குறைந்த பட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 60 | 70 | 60 | 50 | 60 |
| காற்றின் வேகம் (கி.மீ./மணி ) | 18 | 20 | 20 | 18 | 18 |
| காற்றின் திசை (கோணம்) | 20 | 20 | 50 | 50 | 20 |
| மேக மூட்டம் (ஆக்டா) | 6 | 5 | 7 | 7 | 5 |

## வானிலை சுருக்கம் / எச்சரிக்கை:

28.12.2023 முதல் 30.12.2023 வரை இலேசான மழை பெய்ய வாய்ப்புள்ளது. அடுத்த ஐந்து நாட்களுக்கு வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். காற்றின் ஈரப்பதம் 80-90% ஆகவும், பகல் நேரங்களில் 50-70% ஆக இருக்க வாய்ப்பு உள்ளது. அதிகபட்ச வெப்பநிலை 27.0-28.0 °C ஆகவும் குறைந்தபட்ச வெப்பநிலை 22.0-23.0 °C ஆகவும் இருக்கும். காற்றின் வேகமானது மணிக்கு 18-20 கி.மீ ஆக வீசக்கூடும்.

## பொது ஆலோசனை:

31.12.2023 முதல் 06.01.2023 வரை தமிழ்நாட்டில் மழை இயல்பை விட அதிகமாக இருக்கும்.

## குறுஞ்செய்தி :

| |
|---|
| இலேசான மழையுடன் அதிக காற்றின் ஈரப்பதம் மற்றும் காற்றின் வேகம் அதிகமாக இருக்க வாய்ப்புள்ளதால் வயல்களில் பூச்சி மற்றும் நோயின் தாக்கம் அதிகமாக இருக்க வாய்ப்புள்ளது. |

## பயிர் குறிப்பிட்ட ஆலோசனை:

| பயிர் | பயிர் குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| நெல் | தற்பொழுது நிலவி வரும் வானிலையின் காரணமாக நெற்பயிரில் இலைச்சுருட்டுப்புழு மற்றும் தண்டுத்துளைப்பான் தாக்கம் காணப்படுவதால் அதை கட்டுப்படுத்த கார்போசல்பான் 400 மிலி/ஏக்கர் அல்லது கார்டாப் ஹைட்ரோகுளோரைடு 600 கி/ஏக்கர் என்ற அளவில் காலை அல்லது மாலை தெளிக்கவும். |
| நிலக்கடலை | தற்பொழுது நிலவிவரும் வானிலையின் காரணமாக நிலக்கடலையில் புகையிலை வெட்டு புழு தாக்கம் தென்பட வாய்ப்புள்ளது இதைக் கட்டுபடுத்த இனக்கவர்ச்சி பொறி ஏக்கருக்கு 5 என்ற எண்ணிக்கையில் வைக்கவும். ஏக்கருக்கு ப்ளுபென்டிமைட் 20 WG 120 கிராம்என்ற அளவில் தெளிக்கவும். |

## தோட்டக்கலை குறிப்பிட்ட ஆலோசனை:

| தோட்டக்கலை | தோட்டக்கலை குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| முந்திரி | தேயிலை கொசுபூச்சியைக் கட்டுப்படுத்த முதலில் தயாமீதாக்ஷம் 25% WG 100 கிராம்/எக்டர் தண்ணீரில் கலந்து துளிர்விடும் (ஃப்ளஷிங்) கட்டத்திலும், இரண்டாவது குளோர்பைரிபாஸை 2.0 மில்லி/லிட்டர் தண்ணீரில் கலந்து பூக்கும் தருணம் மற்றும் மூன்றாவது புரொபனோபாஸ் 1.0 மில்லி/லிட்டர் தண்ணீரில் கலந்து காய்பிடிக்கும் தருணத்தில் தெளிக்கவும். |
| வாழை | 1. தற்பொழுது நிலவிவரும் சூழ்நிலையில் வாழையில் சிக்காடோக்கா இலைப்புள்ளி நோய்தாக்கம் தென்பட்டால் கார்பென்டாசிம்1.0 கிராம்/லிட்டர் அல்லது புரோபிகோனசோல் 1.0 மிலி/லிட்டர் அல்லது மேங்கோசெப் 2.5 கிராம்/லிட்டர் மற்றும் ஒட்டும் திரவம் 1.0 மிலி/லிட்டர் கலந்து 10-15 நாட்கள் இடைவெளியில் தெளிக்கவும். 2. தற்பொழுது நிலவி வரும் சூழ்நிலையில் வாழையில் பனாமா வாடல் நோய் மற்றும் நூற்புழு தாக்குதலைக் கட்டுப்படுத்த பேசில்லஸ் சப்டிலிஸ் 1.0 கிலோ/எக்டர்+ பேசில்லோ மைசிஸ்லிலேசினஸ் 1.0 கிலோ/எக்டர் என்ற அளவில் நடவு செய்த 2, 4 மற்றும் 6 வது மாதத்தில் வேர் பகுதியில் இட்டு நீர்பாய்ச்சவும். |

## உயிருள்ள விலங்குகள் குறிப்பிட்ட ஆலோசனை:

| உயிருள்ள விலங்குகள் | உயிருள்ள விலங்குகள் குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| பசு | காற்றின் ஈரப்பதன் அதிகமாக இருப்பதால் இளம் கன்றுகளுக்கு நுரையீரல் அழற்சி போன்ற நோய் தாக்கத்திற்கு வாய்ப்புள்ளது. எனவே கால்நடை மருத்துவரை அணுகி ஆலோசனை பெறவும். கால்நடைகளின் மேய்ச்சல் நிலத்தில் பனித்துளி உலர்ந்த பின் மேய்ச்சலுக்கு அனுப்பவும். |